# ஊழியர் புரள்வில் தாக்கம் செலுத்தும் காரணிகள்: மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரச வங்கிகளுக்கும் தனியார் வங்கிகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**Supervisor**
*Mr. KMM. Faleel Haque,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. K. Manchula,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரசவங்கிகளுக்கும் தனியார் வங்கிகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பீட்டாய்வு எனும் தலைப்பிலான இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்றைய போட்டிநிறைந்த பொருளாதார சூழ்நிலையில் வங்கி போன்ற சேவை நிறுவனங்களில் ஊழியரைத் திருப்திப்படவைத்து ஊழிய ஸ்திரத் தன்மையைப் பேணல், ஊழியர் புரள்வைக் குறைத்தல் என்பன பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வுப் பிரச்சினைகளாகக் கொண்டு இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஊழியர் புரள்வில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளைக் கண்டறிதலே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுவதுடன் அரசவங்கியின் ஊழியர் புரள்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிதல், தனியார் வங்கியின் ஊழியர் புரள்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிதல், ஊழியர் புரள்வால் வங்கிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை இனங்காணல், ஊழியர் புரள்வு வீதத்தைக் குறைப்பதற்கான விதந்துரைகளை முன்வைத்தல் முதலியன துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதேசத்தில் காணப்படும் வங்கிகளினுடைய 50 ஊழியர்கள், 06 முகாமையாளர்கள், 05 பழைய ஊழியர்கள் முதலானோரை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக வினாக்கொத்து, நேர்காணல், இலக்குக்குழு கலந்துரையாடல் போன்றன முதலாம் நிலைத் தரவுசேகரிப்பு முறைகளாகப் பயன்படுத்தப்பட்டுளதுடன் முன்னைய ஆய்வுகள், நூல்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக புள்ளிவிபரத் திரட்டுகள், வங்கிஅறிக்கைகள், இணையத் தளதரவுகள் முதலியன இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வில் அரசவங்கிகளின் ஊழியர் புரள்வில் அதிகம் தாக்கம் செலுத்தும் காரணிகளாக தலைமைத்துவப் பாங்குகள் மற்றும் ஊழியர் செயற்றிறன் மட்டம் தொடர்பான காரணிகளே இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் தொழில் வாழ்க்கைத்தரம், மனவழுத்தம் முதலியனவற்றுடன் தொடர்புடைய காரணிகள் மிகக் குறைவான அளவே தாக்கம் செலுத்துகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறே தனியார் வங்கிகளின் ஊழியர் புரள்வில் வேலைத் திருப்தியின்மை, தொழில் வாழ்க்கைத் தரம், மனவழுத்தம் போன்ற காரணிகள் அதிகம் தாக்கம் செலுத்தவதாக இனங்காணப்பட்டுள்ளதுடன் ஊழியர் செயற்றிறன் மட்டம், தலைமைத்துவப் பாங்குகள் தொடர்பான காரணிகள் மிகக் குறைவாக தாக்கம் செலுத்துகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. ஊழியர் புரள்வால் வங்கிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளாக புதியவாடகைச் செலவு, பயிற்சிக்கான செலவு, ஊழிய நலன்களுக்கான செலவு மற்றும் நேரவியம், நிறுவனத்தின் நன்மதிப்பு

இழக்கப்படல், அனுபவமுள்ள ஊழியர்களின் வெளியேற்றம், நிறுவனத்தின் இலக்கை அடைய நீண்டகாலம் எடுத்தல் முதலிய பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. நியாயமான கொடுப்பனவு முறை, முறையான பயிற்சி வழங்கல், நெகிழ்ச்சியுடன் கூடிய தலைமைத்துவம் முதலியன ஊழியர் புரள்வைக் குறைப்பதற்கான விதந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***Key words***: ஊழியர் புரள்வு, தாக்கம் செலுத்தும் காரணிகள், வங்கித்துறை